ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2303/04 - 2022 ඔක්තෝබර් මස 25 වැනි අඟහරුවාදා - 2022.10.25

*2303/04 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக்குறிப்பினைத் திருத்தியமைத்தல் - திருத்த இலக்கம் 08

*2013, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதிய 1836/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட, பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீள திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம். ஏ. பீ. தயாசெனரத்,**
செயலாளர்,
*அசராங்க சேவை ஆணைக்குழு.*

*2022, ஒற்றோபர் 13.*

**பகுதி I**

திருத்த இலக்கம் 01 - 2014, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 1887/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்
திருத்த இலக்கம் 02 - 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதிய 1905/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்
திருத்த இலக்கம் 03 - 2017, பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதிய 2006/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்
திருத்த இலக்கம் 04 - 2017, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 2049/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்
திருத்த இலக்கம் 05 - 2019, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய 2138/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்
திருத்த இலக்கம் 06 - 2020, ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய 2190/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்
திருத்த இலக்கம் 07 - 2021, யூன் மாதம் 23 ஆந் திகதிய 2233/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்

## பகுதி II

*7.3.1.2 தகைமைகள்*

தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திகதிக்குப் பின்வரும் (i), (ii), (iii), (iv) மற்றும் (v) ஆம் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஒன்றுடன் 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை பொறியியலாளர் சபையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது இணைப் பொறியியலாளராகப் பதிவு செய்திருத்தல்.

(i) மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.
(ii) மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.
(iii) மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.
(iv) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் அல்லது இலங்கை தொழிநுட்பச் சேவையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவப் பதவியில் கடமையாற்றும் உத்தியோத்தராக 21 வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துடன் அச் சேவையின் விசேட தரத்திற்குப் பதவியுயர்வு பெற்றிருத்தல்.
(v) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் அல்லது இலங்கை தொழிநுட்பச் சேவையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் அல்லது புகையிரத திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவப் பதவியில் கடமையாற்றும் உத்தியோகத்தராக 15 வருடங்களுக்குக் குறையாத செயலூக்கமிக்க மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும்

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில், அவ் ஆணைக்குழுவினாலும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பாடப்பரப்பின் கீழ் 04 வருட பொறியியல் துறை தொடர்பான பாடநெறியொன்றை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) 7.3.1.2 (v) (அ) இல் காட்டப்பட்டுள்ள பட்டப் பாடநெறிக்கு சமனான தகைமையாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, கல்வி மற்றும் ஏனைய அனைத்துத் தேவைப்பாடுகளையும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பாடத்துறையின் கீழ் பூர்த்தி செய்து அது தொடர்பான செல்லுபடியாகும் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

குறிப்பு : இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக்குறிப்பின் 07 ஆவது திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 03 வருடங்கள் வரை அதாவது 2024.06.23 ஆந் திகதி வரை மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்கையில் "2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை பொறியியலாளர் சபையின் கூட்டிணைக்கப்பட்ட அல்லது இணைப் பொறியியலாளராகப் பதிவு செய்திருத்தல்" எனும் தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. எவ்வாறாயினும் 2024.06.23 ஆந் திகதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருடங்களினுள் ஏற்புடைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் என்பதுடன், உரிய காலப்பகுதியினுள் அத்தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களின் 3 ஆவது சம்பளவேற்றத்தை அத்தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யும் தினம் வரை இடைநிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*10.3.1 பூர்த்திசெய்ய வேண்டிய தகைமைகள்*

(i), (ii), (iii), (iv) மற்றும் (v) (அ) என்பன மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

(v) (ஆ) 09 மாதங்களுக்குக் குறையாத பாடநெறிக் காலத்துடன் பொறியியல் துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா/ பட்டப்பின் படிப்பு பட்டத்தைப் பூர்த்தி செய்தல் அல்லது முகாமைத்துவத் துறையில் அல்லது தகவல் தொழிநுட்பத் துறையில் அல்லது வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டப்பின் படிப்பு சான்றிதழைப் பெற்றிருப்பதுடன் பட்டயப் பொறியியலாளர் நிலையைத் தொடர்ச்சியாகப் பேணியிருத்தல்.

*10.3.2* பதவி உயர்வு முறை

*10.3.1* இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்பின் படி ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 01 ஆந் திகதி மற்றும் சனவரி மாதம் 01 ஆந் திகதியன்று நிலவும் வெற்றிடங்களின் படி *11.3* (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விசேட தரத்திற்கான தரம் உயர்வு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

குறிப்பின் கீழ் காணப்படும் விடயங்கள் மாற்றமின்றி அவ்வாறே செயல்வலுப்பெறும்.

*11.3* தெரிவு செய்யப்படும் முறை

(அ) மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.
(ஆ) மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.
(இ) மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப் பெறும்.
(ஈ) விசேட தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்:

விசேட தரத்தில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிர்வாக அதிகாரியினால் பதவி வெற்றிடங்கள் விளம்பரம் செய்யப்பட்டு தரம் I உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகள் 70 இன் பிரகாரம் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம், சேவை மூப்பின் அடிப்படையில் மேற்குறித்த *10.3.2* இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி விசேட தரத்திற்குத் தரம் உயர்த்தப்பட்டு, விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்துள்ள பதவிகளுக்கு அவர்களின் விருப்பத் தெரிவு ஒழுங்கு கவனத்திற் கொள்ளப்பட்டு, சேவைமூப்பு கூடியவருக்கு முன்னுரிமை கிடைக்கக்கூடியவாறு குறித்த நேர்முகப் பரீட்சை சபை மூலமாகவே அந்தந்தப் பதவிகளுக்கு நியமிப்பதற்காக செய்யப்படும் பரிந்துரைகளின் படி பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

EOG *10 - 0219*